பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
27 08 2024 7 15
செவ்வாய்கிழமை இரவு

<u>தலைப்புச் செய்திகள்</u>

- ரஷ்யா – உக்ரைன் போருக்கு விரைவில் அமைதியான தீர்வு காண்பது குறித்து பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினுடன் இன்று தொலைபேசியில் ஆலோசனை நடத்தினார்.
- பிரேசில் தலைமையில் நடைபெறவுள்ள ஜி-20 உச்சி மாநாட்டுக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.
- தில்லி மதுபான கொள்கை முறைகேடு மற்றும் சட்டவிரோத பண பரிவர்த்தனை வழக்குகளில் பாரத் ராஷ்ட்ர சமீதி கட்சியின் திருமதி கவிதாவுக்கு உச்சநீதிமன்றம் இன்று ஜாமின் வழங்கியது.
- மலையாள திரைப்பட கலைஞர்கள் சங்கத்தின் தலைவர் பதவியை நடிகர் மோகன்லால் இன்று ராஜிநாமா செய்துள்ளார்.
- டுவெண்டி – டுவெண்டி மகளிர் உலகக்கோப்பைக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ----*</u>

பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று ரஷ்ய அதிபர் திரு விளாடிமிர் புட்டினுடன் தொலைபேசிய மூலம் தொடர்பு கொண்டு உரையாடினார்.

அப்போது இந்தியா – ரஷ்யா இடையேயான சிறப்புரிமை மிக்க இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை நடத்தினார்.

தாம் மேற்கொண்ட உக்ரைன் பயணம் குறித்து தெரிவித்த திரு நரேந்திமோடி, ரஷ்யா – உக்ரைன் இடையேயான போரின் தற்போதைய நிலை குறித்தும் கேட்டறிந்தார்.

இந்த போருக்கு விரைவில் அமைதியான தீர்வு கிடைப்பதற்கான அனைத்து முயற்சிகளுக்கும் இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று திரு நரேந்திரமோடி, ரஷ்ய அதிபரிடம் கூறினார்.

[]<<<>>>[]

பிரேசில் தலைமையில் வரும் நவம்பர் மாதம் ரியோடி – ஜெனிரோவில் நடைபெறவுள்ள ஜி-20 உச்சி மாநாட்டுக்கு இந்தியா முழு ஆதரவு அளிக்கும் என்று வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கர் உறுதிபட தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தொடங்கிய ஒன்பதாவது இந்தியா – பிரேசில் கூட்டுக்குழு மாநாட்டில் உரையாற்றிய அவர், ஜி-20 உச்சிமாநாட்டுக்காக பிரேசில் மேற்கொண்டு வரும் முயற்சிகள் பாராட்டுக்குரியது என்று கூறினார்.

கடந்த 2006-ஆம் ஆண்டு முதல் இந்தியா – பிரேசில் இடையேயான நட்புறவு பல்வேறு துறைகளிலும் விரிவடைந்திருப்பதாக அவர் தெரிவித்தார்.

பாதுகாப்பு, விண்வெளி, இணையதள பாதுகாப்பு, வர்த்தகம், முதலீடு உள்ளிட்ட துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு வலுபெற்றிருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பிரேசில் நாட்டில் இந்தியாவின் கலாச்சாரம், மேடைக் கலைகள் மற்றும் இந்திய தத்துவ சிந்தனைகள் மேலோங்கி இருப்பது பாராட்டுக்குரியது என்றம் அவர் கூறினார்.

[]<<<>>>[]

மத்திய அரசின் ஓய்வூதியதாரர்களுக்கான அனுபவ் சாதனை விருதுகளை பணியாளர் நலன் மற்றும் ஓய்வூதியத்துறை இணை அமைச்சர் திரு ஜிதேந்திரசிங் நாளை புதுதில்லியில் வழங்குகிறார்.

ஓய்வூதியதாரர் நலத்துறை மூலம் கடந்த 2015-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அனுபவ் ஆன்லைன் செயலி மூலம் ஓய்வூதியதாரர்கள் தங்களது பணிக்காலத்தில் செய்த சாதனைகளை பதிவிட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் பணிக்காலத்தில் சிறப்பாக கடமையாற்றிய ஓய்வூதியதாரர்களுக்கு இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

அனுபவ் சாதனை விருதுகள் ஐந்து பேருக்கு இந்நிகழ்ச்சியில் வழங்கப்படவுள்ளது.

மேலும் சிறப்பாக கடமையாற்றிய பத்து பேருக்கு அனுபவ் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

[]<<<>>>[]

மக்களுக்கும் -அரசுக்கும் இடையே இந்திய தகவல் பணி அதிகாரிகள் பாலமாக செயல்பட்டு வருவதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று பயிற்சி முடித்த இந்திய தகவல் பணி அதிகாரிகளிடையே அவர் பேசினார்.

தகவல் பணியில் அறிமுகம் செய்யப்பட்டுள்ள புதிய முதுகலை பட்டப்படிப்புகளில் வெற்றிபெற்ற மாணவர்களுடன் கலந்துரையாடியது, சமுதாய வானொலியை பார்வையிட்டது உள்ளிட்டவை குறித்து தமது கருத்துக்களை பயிற்சி அதிகாரிகளுடன் அவர் பகிர்ந்து கொண்டார்.

ஊடகத்துறையில் தொழில் முனைவோருக்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இந்திய தகவல் பணித்துறை செயல்பட்டு வருவதாக திரு எல் முருகன் தெரிவித்தார்.

[]<<<>>>[]

மருத்துவர்களுக்கான சுகாதார பாதுகாப்பு, பணிச்சூழல் மற்றும் பாதுகாப்பு குறித்த பரிந்துரைகளை வழங்குவதற்காக உச்சநீதிமன்றத்தால் அமைக்கப்பட்ட தேசிய அளவிலான பணிக்குழுவின் முதலாவது கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

இக்கூட்டத்த.ில் பல்வேறு தரப்பிலிருந்து தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

இன்றைய கூட்டத்தில் மத்திய அமைச்சரவை செயலர், சுகாதாரத்துறை செயலர், உள்துறை செயலர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மத்திய சுகாதாரத்துறையின் இணையதளத்தில் நாடு முழுவதிலுமிருந்து பல்வேறு தரப்பினர் தெரிவித்துள்ள கருத்துக்களை பரிசீலிக்குமாறு தேசிய பணிக்குழுவை மத்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

இதுவரை 400-க்கும் மேற்பட்ட ஆலோசனைகள் அளிக்கப்பட்டுள்ளன.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மருத்துவ துறை சார்ந்த அதிகாரிகள், காவல்துறை தலைவர்கள் உள்ளிட்டோர் நாளை நடைபெறும் கூட்டத்தில் காணொலி வாயிலாக கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை பதிவு செய்யவுள்ளனர்.

[]<<<>>>[]

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் பெண் மருத்துவர் கொலை செய்யப்பட்டதை அடுத்து, போராட்டம் நடத்துபவர்களுக்கும், காவல் துறையினருக்கும் இடையே இன்று மோதல் ஏற்பட்டது.

ஹவுரா பிரிட்ஜ், ஃபோர்ஷோர் சாலை, சந்திரகாசி ஆகிய இடங்களில் போராட்டக்காரர்கள், மாணவர்கள் பேரணியாகச் சென்று ஆர்ப்பாட்டம் நடத்தியபோது காவல்துறையினர் அவர்களை தடுத்து நிறுத்த முற்பட்டனர்.

தடியடி நடத்தியும், கண்ணீர் புகைக்குண்டு, தண்ணீரை பீய்ச்சி அடித்தும் கூட்டத்தை கட்டுப்படுத்த காவல்துறையினர் முயன்றனர்.

தடுப்புகளை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டதால் காவல்துறையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே காவல்துறையினர் மாணவர்கள் மீது நடத்திய தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவித்து பிஜேபி நாளை காலை ஆறு மணி முதல் 12 மணி நேர கடையடைப்பு போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளது.

இதனிடையே மேற்குவங்க மாநில ஆளுநர் திரு சி வி ஆனந்தபோஸ், போராட்டக்காரர்கள் மீது காவல்துறையினர் தாக்குதல் நடத்துவதை தவிர்க்க வேண்டுமென்று அம்மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

[]<<<>>>[]

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் உடனடியாக விடுவிக்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், ரமேஸ்வரத்தைச் சேர்ந்த எட்டு மீனவர்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவர்களையும் சேர்த்து இதுவரை 116 இந்திய மீனவர்கள் இலங்கை சிறைகளில் உள்ளதாகவும், 184 மீன்பிடி படகுகள் இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் உள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களின் படகுகளையும் விரைவாக விடுவித்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வெளியுறவுத்துறை அமைச்சரை திரு மு க ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

[]<<<>>>[]

தில்லி மதுபான் கொள்கை முறைகேடு மற்றும் சட்டவிரோ பண பரிவர்த்தனை தொடர்பான வழக்குகளில் பாரத் ராஷ்ட்ர சமீதி கட்சியின் மூத்த தலைவர் திருமதி கவிதாவுக்கு உச்சநீதிமன்றம் இன்று ஜாமின் வழங்கியது.

இதற்கான உத்தரவை பிறப்பித்த நீதிபதிகள் திரு கே வி விஸ்வநாதன், திரு பி ஆர் கவாய் ஆகியோரைக் கொண்ட அமர்வு, ஐந்து மாதங்களுக்கு மேல் திருமதி கவிதா சிறையில் இருப்பதை சுட்டிக்காட்டினர்.

இருப்பினும் சிபிஐ மற்றும் அமலாக்கப்பிரிவின் புலனாய்வு விசாரணை இன்னும் முடிக்கப்படவில்லை. எனவே அவருக்கு ஜாமீன் அனுமதிக்கப்படுவதாகத் தெரிவித்தனர்.

திருமதி கவிதாவுக்கு ஜாமின் வழங்க மறுத்து தில்லி உயர்நீதிமன்றம் கடந்த ஜூலை மாதம் ஒன்றாம் தேதி பிறப்பித்த உத்தரவையும் நீதிபதிகள் ரத்து செய்தனர்.

[]<<<>>>[]

மலையாள திரைப்பட கலைஞர்கள் சங்கத்தின் தலைவர் பதவியை நடிகர் மோகன்லால் இன்று ராஜிநாமா செய்துள்ளார்.

மலையாள திரைப்படத்துறையில் உள்ள பெண்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படுவதாக ஓய்வுபெற்ற நீதிபதி ஹேமா குழு அளித்த அறிக்கையின் அடிப்படையில், மலையாள திரைப்பட கலைஞர்கள் சங்கத்தின் 16 உறுப்பினர்கள் கொண்ட செயற்குழு ஒட்டுமொத்தமாக ராஜிநாமா செய்யும் முடிவை எடுத்தது.

இதனிடையே கேரள அரசு திரைப்படத்துறையில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பாக புலனாய்வு மேற்கொள்ள ஏழு பேர் கொண்ட சிறப்புக்குழுவை அமைத்துள்ளது.

முன்னதாக இப்பிரச்சினை குறித்து முதலமைச்சர் திரு பினராயி விஜயன் தலைமையில் உயர்மட்ட ஆலோசனை நடைபெற்றது.

[]<<<>>>[]

டுவெண்டி – டுவெண்டி மகளிர் உலகக்கோப்பைக்கான 15 பேர் கொண்ட இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

Harmanpreet Kaur தலைமையிலான இந்த அணியின் துணை கேப்டனாக ஸ்மிருதி மந்தனா அறிவிக்கப்பட்டுள்ளார்.

இப்போட்டி ஐக்கிய அரபு எமிரேட்ஸில் வரும் அக்டோபர் மாதம் மூன்றாம் தேதி தொடங்கி 20-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

துபாய் மற்றும் சார்ஜாவில் இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

குரூப்-ஏ பிரிவில் இந்தியாவுடன் ஆஸ்திரேலியா, நியுசிலாந்து, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ளன.

*End of News*